# BIO-DATA
of
# Prof. S. SHANMUGAVEL
TAMILNADU — INDIA

தொழில் : இந்திய அரசாங்கத் தொலைபேசி இலாகாவில் 38 வருட சேவை நிறைவு செய்திருப்பது. — Now - Retired

ஏற்கனவே ஆற்றிய சமயப் பணிகள்:

தூத்துக்குடி சித்தாந்த சபையில் சுமார் 20 ஆண்டுகள் திருவாசக விரிவுரை ஆற்றியது மற்றும் சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தியது.

திருநெல்வேலி பன்னிருதிருமுறை வழிபாட்டு மன்றம் மற்றும் திருநெல்வேலி சிவநெறிக் கழகம் விக்கிரமசிங்கபுரம் சைவ நெறிக் கழகம், திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை ஆகியவற்றில் பல சொற்பொழிவுகளும், வகுப்புகளும் நிகழ்த்தி வருவது

நாகர்கோவில், திருநெல்வேலி, கோவில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி போன்ற நகரங்களில் சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தி வருவது

திருப்பனந்தாள் ஆதீனத்தின் சார்பில் நடந்த குமரகுருபரர் ஆய்வு மையத்தில் ஆங்கிலக் கருத்தரங்களில் கலந்து கொண்டு ஆய்வுரைகள் சமர்ப்பித்தது. திருப்பனந்தாள் ஆதீனத்திலிருந்து வெளிவரு ''குமரகுருபரன்'' மாத இதழில் அந்த ஆய்வுரைகள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

கோலாம்பூர், பினாங்கு, கிளாங்கு, ஷா ஆலம், சிங்கப்பூர், இலண்டன், பெர்மிங்ஹாம், ஆக்ஸ்போர்டு, போன்ற வெளிநாட்டு நகரங்களில் சமயச் சொற்பொழிவுகள், வகுப்புகள் நிகழ்த்தியது. — Also held at (x)

தற்போது ஆற்றிவரும் சமயப் பணிகள்:

திருவாவடுதுறை ஆதீன சார்பில் நடந்து வரும் பயிற்சி வகுப்பில் திருநெல்வேலி டவுண், மகராசநகர், சிவகாசி ஆகிய 3 மையங்களில் பேராசிரியராகப் பணி செய்து வருதல்.

விக்கிரமசிங்கபுரம் சைவநெறிக் கழகம் ஆண்டு தோறும் மே மாதத்தில் நடத்தி வரும் 15 நாள் கோடை வகுப்பில் பேராசிரியராகவும், இயக்குநராகவும் பணி புரிந்து வருவது. தமிழ்நாட்டில் சமய மற்றும் சமுதாய அமைப்புகளில் விழாக்கள் பலவற்றில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி வருவது.

கோயம்புத்தூர் ஈச்சனாரி கற்பகம் கலை அறிவியல் கல்லூரி பன்னிருதிருமுறை ஆய்வு மையத்தில் பல தொடர் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரைகள் ஆற்றி வருவது

(x) Paris — Den-helder (Holland) — Amsterdam
Zurich — Colombo — Toronto — Montreal

Title of
Siddhanta Kalanithi - by - World Saiva Council @ ZURICH, Swiss

<u>பெற்ற பட்டங்கள்:</u> பழம்பெருமை மிக்க தூத்துக்குடி சைவ சிந்தாந்த சபை **''சித்தாந்த நன்மணி''** என்ற பட்டத்தை 1983ல் வழங்கியது.

இளைஞர்கள் நடத்தி வரும் தூத்துக்குடி மெய்கண்டார் கழகம் 1987ல் **''சைவத்தென்றல்''** என்ற பட்டத்தை வழங்கியது.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் 1995ல் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் குருபூஜை விழாவில் **''சித்தாந்த வித்யாநிதி''** என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள்.

கோயம்புத்தூர் சைவப் பெருமக்கள் பேரவை தனது 24.08.2003 அன்று நடந்த மாநாட்டில் கீழ்க்கண்ட சிறப்புகளை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

(அ) **திருநாவுக்கரசர் விருது**
(ஆ) **சைவ நன்மணி** என்ற பட்டம்
(இ) பொற்கிழி

<u>பெற்ற சிறப்புகள்:</u> 1992 முதல் திருவாவடுதுறை ஆதீனம் நடத்தி வரும் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சியில் ஏழு மையங்களில் பேராசிரியராகப் புணியாற்றி இதுவரை சுமார் 3000 மாணவர்களுக்கு மேல் சைவ சித்தாந்த கல்வியை முறையாகப் பயிற்றுவித்தது.

மலேசிய நாட்டு சைவ சித்தாந்த மன்றத்தின் கௌரவ ஆலோசகராகப் பணிபுரிவது.

2000ம் ஆண்டு செப்டம்பரில் நடந்த மலேசிய நாட்டு சைவ சித்தாந்த மகாநாட்டின் கருத்தரங்கத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்புரை ஆற்றியது.

2003 செப்டம்பரில் 26, 27, 28 ஆகிய தேதிகளில் மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் நடந்த 9வது உலக சைவ மகாநாட்டில் ஆங்கிலம் மற்றும் தமிழ்க் கருத்தரங்குகளில் ஆய்வுரைகள் சமர்ப்பித்துப் பேருரைகள் ஆற்றியது. (x)

சென்னை, தியாராசநகர் வாணி மஹால் மண்டபத்தில் 18.1.04 அன்று நடந்த, காஞ்சி காமகோடி பீடம், சங்கராச்சாரிய சுவாமிகள் பீடம் ஏற்ற பொன்விழா நிகழ்ச்சியில் பொற்காசு, பொன்னாடை பாராட்டுப் பத்திரம் ரொக்கப் பரிசு ஆகியவை வழங்கப் பெற்றது.

10th

(x) World Saiva Conference @ Sydney - Australia
World Saiva Conference @ ZURICH -

இங்கிலாந்து நாட்டின் ஹிந்துக் கோயில்கள் ஒன்றியத்தினால் விரும்பி அழைக்கப்பட்டு, 2004 ஜூலை 10, 11 தேதிகளில் நடந்த ஏழாவது இலண்டன் சைவ மகாநாட்டில் தமிழ், ஆங்கில மொழிகளில் ஐந்து பேருரைகள் நிகழ்த்தி, இலண்டன் வாழ் தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றது.

ஒலிநாடாக்கள் வெளியிட்டது:

அவ்வப்போது பலநாடுகளில் நடந்த விழாக்களிலும் சைவ சமய வகுப்புகளிலும், பேசிய பேச்சுக்கள் **நூற்றுக்கும்** மேற்பட்ட ஒலிநாடாக்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் **கீழ்க்கண்ட CD ஒலிநாடாக்கள்** விற்பனைக்காகத் தமிழ்நாட்டிலும், மலேசியா, இங்கிலாந்து நாட்டிலும் கிடைக்கும்.

**கருணைக்கு அருணகிரி** - விலை ரூ. 99/- அருணகிரி நாதருக்கு இந்தச் சிறப்புப் பெயர் ஏன் வந்தது என்பதையும், அவரின் வரலாற்றுச் சிறப்புகள் மற்றும் திருப்புகழ்ப் பெருமை ஆகியவற்றை விளக்குவது, (திருச்செந்தூர் கந்தசஷ்டி விழாவில் திருப்பனந்தாள் ஆதீன எஜமான் சுவாமிகள் அவர்கள் திருக்கரங்களால் வெளியிட்டு அருளியது)

**குறளும் சித்தாந்தமும்** - விலை ரூ. 99/- திருவள்ளுவர் எப்படிச் சித்தாந்தம் கூறுகிறார் என்பதையும் அவருடைய வரலாற்று நிகழ்ச்சிகளையும் திருக்குறள் அரங்கேற்றம் எப்படி நிகழ்ந்தது என்பதையும் எடுத்தியம்புவது. (திருவாவடுதுறையில் ஜனவரி 2003ல் நடந்த நமச்சிவாய மூர்த்திகளின் மகரத் தலைநாட் குருபூசை விழாவில், திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் அவர்களின் திருக்கரங்களால் வெளியிட்டு அருளியது)

**திருக்கயிலாய குருபரம்பரை** - விலை ரூ.110/- மலேசியாவின் தலைநகர் கோலாம்பூரில் நடைபெற்ற 9வது உலக சைவ மகாநாட்டின் தொடக்க விழா 26.09.2003 (வெள்ளி) அன்று வெளியிட்டது.

கயிலாயம் பற்றி பல அரிய செய்திகள், பரம்பரை பற்றிய பல விளக்கங்கள், திருவாவடுதுறை ஆதீன உன்னத மரபு மற்றும் பணிகளை விளக்கமாகக் கூறும் முதல் CD ஒலி நாடா இதுவே ஆகும்.

- திருச்சிற்றம்பலம் -



ց